விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 20 திங்கட்கிழமை (02.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166




## அரசின் சவால்களுக்கு முகம் கொடுக்க எதிர்க்கட்சிகள் இணைந்து பாரிய கூட்டணி

(கொழும்பு)

அரசாங்கத்திடமிருந்து எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம்கொடுக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரிய கூட்டணி ஒன்றை அமைக்கவுள்ள தாகத் தெரிய வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் அனைத்தும் ஒரே குடையின் கீழ் நின்று அரசாங்கத்திற்கு எதிராகப் போராடப் போவதாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டணியின் தலைவராக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருப்பார் என்றும் ருக்மன் சேனநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்துவார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளைக் கருத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் வைத்து 4 தமிழர்கள் கடத்தல்

(புத்தளம்)

புத்தளம் தப்போவ என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இரண்டு சம்பவங்களில் கிறிஸ்தவ மதகுரு ஒருவரும் அவரின் உதவியாளரும் உட்பட நான்கு தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம் - மன்னார் வீதியில் இடம்பெற்றுள்ளது. இவர்களை வெள்ளை வானில் வந்தவர்களே கடத்திச் சென்றுள்ளதாகத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஜனாதிபதி மகிந்த ஜூன் 6-ல் சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்திற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் எதிர்வரும் 6 ஆம் திகதி சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருப்பதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ள நிலையிலேயே இச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத், பொதுச் செயலாளர் ஹசன் அலி ஆகியோர் ஜனாதிபதியின் ஆலோசகரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 19 ஆயிரம் குடும்பங்கள் தொடர் மழையால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களிலும் நேற்று மாலையுடன் முடிபடைந்த 48 மணிநேரங்களாகப் பெய்து வரும் கடுமையான மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக இதுவரை குறைந்தது 4 பேர் இறந்திருக்கின்றார்கள். மேலும் 19 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இயற்கை அனர்த்தம் குறித்துக் கருத்து வெளியிட்ட அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அமீர் அலி; களுத்துறை ,காலி, கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மீட்புப் (10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கினை மீட்கும் நடவடிக்கையை தடுப்பதற்கு சர்வதேச மட்டத்தில் சதி



## பிரதமர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கினை மீட்கும் நடவடிக்கையினைத் தடுப்பதற்கு தேசிய , சர்வதேச மட்டத்தில் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் புத்திசாதுரியத்துடன் மக்கள் செயற்படுவதால் அதனைத் தடுக்க முடிகின்றது என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.** (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வாரம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது ரயில் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு ரயில்வேத் திணைக்கள உயர் அதிகாரியான விஜய சமரசிங்க தெரிவிக்கையில்,

மிகக் குறைந்த கட்டணமானது இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் கிலோ மீற்றர் ஒன்றுக்கான கட்டணம் 90 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

எரிபொருள்களின் விலை உயர்ந்திருப்பதால் ரயில் போக்குவரத்தைத் தொடர்வதற்கு இந்தக் கட்டண உயர்வு அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பேருந்துக் கட்டணங்கள் சுமார் 27.2 சதவீதம் அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வரணியில் வயோதிபர் வெட்டிக் கொலை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, குடமியன் வரணியில் வயோதிபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சின்னக்குட்டி (வயது-71) என்பவரே வெட்டிக் கொல்லப்பட்டவர் ஆவார். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது அவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மோதல்களில் 4 படையினர் பலி பத்துப் படையினர் படுகாயம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான வெவ்வேறு மோதல்களில் படைத் தரப்பைச் சேர்ந்த 4 படையினர் கொல்லப்பட்டனர். 10 படையினர் படுகாயமடைந்தனர்.

மணலாறு ஆண்டான்குளத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்த மோதலில் படையினர் மூன்று பேர் கொல்லப்பட்டனர். இம் மோதல் சனிக்கிழமை பிற்பகல் 12.10 மணிக்கு நிகழ்ந்தது.

கிளாலி களமுனையில் நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் பிற்பகல் 1.30 மணிக்கு ஆண்டான்குளத்தில் நடந்த மோதலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் வெட்டிக் கொலை ஏறாவூரில் பெரும் பதற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

காத்தான்குடி அல் சயிட் வீதியைச் சேர்ந்த அப்துல் பாரூக் குத்தூஸ் என்றழைக்கப்படும் வர்த்தகரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து காத்தான்குடி,ஏறாவூர் பகுதிகளில் பெரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக் குழுக்களுடனான தொடர்புகளை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் குற்றவாளிகளுக்கு உதவும் செயற்பாடுகளைக் கைவிட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நீதி விசாரணையாளர் பிலிப் அல்ஸ்டன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் இன்று ஜெனீவாவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படவுள்ளது. அரசாங்கமும் அதிகாரிகளும் இராணுவத்தினருடனும் ஆயுதக் குழுக்களுடனும் தொடர்புகளைக் கொண்டிருப்பது குற்றச்செயல்களை ஊக்குவிக்கும் என பிலிப் அல்ஸ்டனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா குழு (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித் தாக்குதலின் எதிரொலியே புகையிரதக் குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

மண்டைதீவுக்கு அண்மையிலுள்ள சிறுத்தீவு கடற்படைத் தளம் மீது கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதலை நோக்கும் போது தமிழீழ விடுதலைப்புலிகள் மண்டைதீவில் பெரும் தரையிறக்கத்தை மேற்கொள்ளலாம் என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன என்று, கொழும்பிலிருந்து வெளி வரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு ஆய்வுப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

மருதானை - பாணந்துறை புகையிரதத்தில் கடந்த வாரம் (10 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# முதலாவது ஐ.பி.எல் கிண்ணத்தை ராஜஸ்தான் றோயல்ஸ் சுவீகரித்தது

## இறுதிப் பந்துவரை போராடிய சென்னை அணி சோகத்தில்

(மும்பை)

முதலாவது ஐ.பி.எல் வெற்றிக் கிண்ணத்தை வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சுவீகரித்தது. விறுவிறுப்பான ஆட்டத்தில் இறுதிப் பந்து வரை போராடி தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் தோல்வி அடைந்தது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வந்தது.இத் தொடரில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்கள் உள்ளடங்கலாக எட்டு அணிகள் மோதின.

இத் தொடரின் இறுதிப்போட்டி நேற்றிரவு மும்பையில் நடைபெற்றது. இதில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வோர்ன் முதலில் துடுப்பெடுத்தாடுமாறு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பார்த்திப் பட்டேல், விட்யாட் இணைந்து சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர். இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 5.2 ஓவர்களில் 39 ஓட்டங்களை எடுத்தபோது விட்ஜாட் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துப் பார்த்திப் பட்டேலுடன் இணைந்த நம்பிக்கை நட்சத்திரம் சுரேஷ் ரெய்னா அதிரடியாக ஆடினார்.

எனினும் மறுமுனையில் பட்டேல் 33 பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 ஓவர்கள் நிறைவில் 64 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

தொடர்ந்து களமிறங்கிய மோர்கல் வந்த வேகத்தில் 2 சிக்ஸர்கள் விளாசினார். எனினும் மோர்கலும் 16 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 12.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை எடுத்திருந்தது. தொடர்ந்து ரெய்னாவுடன் இணைந்த அணித் தலைவர் தோனி அதிரடியாக ஆட அணியின் ஓட்ட எண்ணிக்கை விரைவாக அதிகரித்தது.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய ரெய்னா 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் உட்பட) 43 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய கப்புக்கெந்தார பந்துகளை வீணடித்து 12 பந்துகளில் 8 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து 5 பந்துகளே மீதமுள்ள நிலையில் தோனியுடன் இணைந்தார் பத்திரிநாத். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் சென்னை சுப்பர் கிங்ஸ் 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஆட்டமிழக்காமல் அணித்தலைவர் தோனி 17 பந்துகளில் (ஒரு பவுண்டரி,2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களையும் பத்திரிநாத் 2 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 6 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யூசுப் பதான் 4 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் தான்வீர், வோட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 164 ஓட்டங்களை எடுத்தால்வெற்றிஎன்ற இலக்குடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி களமிறங்கியது. ஆரம்பத்தில் நிற்னி ஹோனியின் சிறப்பான பந்துவீச்சால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தடுமாற்றத்தை சந்தித்தது.

அவ் அணி 6.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களை எடுத்து திணறியது. எனினும் அடுத்து 4-வது விக்கெட்டுக்காக இணைந்த வோட்சன், யூசுப் பதான் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 45 பந்துகளில் 65 ஓட்டங்களை எடுத்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வெற்றி பெறும் நிலைக்கு அழைத்துச் சென்றது. இந் நிலையில் வோட்சன் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்த போது ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த கைப் சிறப்பாக ஆட மறுமுனையில் யூசுப் பதான் தனது அரைச் சதத்தைக் கடந்தார். எனினும் கைப் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜடேஜாவும் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்து வெளியேற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் எடுத்திருந்தது.

தொடர்ந்து அணித் தலைவர் ஷேன் வோர்ன் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய யூசுப் பதான் 39 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 56 ஓட்டங்களை எடுத்து ரன் அவுட்முறையில் ஆட்டமிழக்க போட்டி விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

14 பந்துகளில் 21 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் 8-வது விக்கெட்டுக்காக இணைந்த ஷேன் வோர்ன், தான்வீர் ஆகியோர் சிறப்பாக ஆடி இறுதிப் பந்துவரை போராடி ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இருபது ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களால் திரில்வெற்றி பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் வோர்ன் 9 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 9 ஓட்டங்களையும் தான்வீர் 7 பந்துகளில் 9 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோர்கல், முரளிதரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் ஷேன் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலாவது ஐ.பி.எல் கிண்ணத்தை தனதாக்கியது.

இறுதிவரை போராடிய தோனி தலைமையிலான சென்னைசுப்பர் கிங்ஸ் அணி 2-வது அணிக்கான பரிசைப் பெற்றது.

(5)

# ஆஸி. ஸ்திரமான நிலையில்; மேற்கிந்தியத் தீவுகள் திணறல்



மைக்கல் கிளார்க்கும் சதம் அடிக்க அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 479 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

பதிலுக்கு,தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 30ஆம் திகதி ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணியை மைக்கல் கிளார்க் சதமடித்து ஸ்திரமான நிலைக்கு அழைத்துச் சென்றார்.

தொடர்ந்து வந்த பிரட்லீயும் அரைச்சதம் அடிக்க அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 479 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தி மேற்கிந்தியத் தீவுகள் அணியை முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதில் சைமண் ஹட்ரிச் 113 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 110 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 65 ஓட்டங்களையும் மற்றும் ஆட்டமிழக்காமல் பிரட் லீ 63 ஓட்டங்களையும் ஜோன்ஸன் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 3 விக்கெட்டுக்களையும் பவல், எட்வேட்ஸ், பிராவோ மற்றும் சமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் அணித்தலைவர் சர்வான் 32 ஓட்டங்களுடனும் சந்தர்போல் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

முன்னதாக மார்ஷல் 53 ஓட்டங்களுடனும் சிமித் 16, மோட்டன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் மைக்கல் கிளார்க் 2 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். 3ஆம் நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்றிரவு நடை பெறவிருந்தது.

(5)

# அணித்தலைவர் பதவியை விரும்பினாலும் தோனியுடன் விரோதம் இல்லை

## யுவராஜ்சிங் தெரிவிப்பு



(டில்லி)

இந்திய அணியின் தலைவராக வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. எனினும் அணித்தலைவர் தோனியுடன் விரோதம் ஏதும் இல்லை என்று யுவராஜ் கூறியுள்ளார்.

சீனியரான யுவராஜை புறக்கணித்து விட்டு தோனி அணித்தலைவராக நியமிக்கப்பட்டதால் இருவருக்கும் இடையே விரோதம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இது முற்றிலும் தவறானது என்று யுவராஜ் மறுப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது,

இந்திய கிரிக்கெட் அணிக்கு தலைவராக இருப்பது மிகப் பெரிய கௌரவம். எனக்கும் அந்த கனவு உள்ளது. ஒரு நாள் அது நிச்சயம் நிறைவேறும் என்று நம்புகிறேன். அதே சமயம் அணித்தலைவர் தோனியுடன் எனக்கு எந்த விரோதமோ மோதலோ இல்லை.

இதெல்லாம் சில ஊடகங்கள் வேண்டுமென்றே கிளப்பும் வதந்தி. நானும் தோனியும் மிகச் சிறந்த நண்பர்கள். ஒருவருக்கொருவர் எப்போதும் உதவிக்கொள்வோம். கிரிக்கெட் எப்படி விளையாடப்பட வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

சொந்த விருப்பங்களை விட அணியின் நலன்தான் முக்கியமானது. தோனி மிக இளம் வயதிலேயே அணித்தலைவராக உயர்ந்துள்ளார். அவருக்கு சக வீரர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். எல்லா வீரர்களுமே அவரை மிகவும் விரும்புகிறோம்.

மிக நெருக்கடியான கட்டத்திலும் பதற்றம் அடையாமல் அணியை வழிநடத்துகிறார். அணித்தலைவருக்கு இது மிகவும் முக்கியமானது. இவ்வாறு யுவராஜ் கூறினார்.

(5)

# இன்று ஒரு தகவல்

## உயர் இரத்த அழுத்தம்

நமது உடம்பில் இரத்த அழுத்தம் இருந்தால் அதை கெடுதல் என்று கூறுவோம். ஆனால் உண்மை அது வல்ல!

இயற்கையாக உள்ள இரத்த அழுத்தம் நமது உடம்புக்குத் தேவையான ஒன்று!

இரத்த அழுத்தம் அதிகமானால் தான் கெடுதல் ஏற்படும். அதை நாம் B.P என்கிறோம் உண்மையில் அது உயர் இரத்த அழுத்தம் (Hypertension) ஆகும்.

இதயம் சுருங்கி இரத்தத்தை ''பம்ப்'' செய்யும் போது இரத்த அழுத்தம் கூடுதலாக இருக்கும். இதை Systolic Blood Pressure என்பார்கள்.

இதயம் விரிந்த நிலைக்குத்திரும்பும் போது இரத்த அழுத்தம் குறையும். இது Diastolic Blood Pressure என்று அழைக்கப்படும்.

இது மாறி இருக்கும் (B.P 140/90 என்பது இது தான்) சீராக இருக்க வேண்டிய இரத்த அழுத்தம் ஒரு அளவுக்கு மேல் அதிகரித்தால் ஆபத்து ஆரம்பம் என்று அர்த்தம்!

உயர்இரத்த அழுத்தமானது பரம்பரை, டென்ஷனான சூழ்நிலையில் வேலைசெய்தல், உடம்பு குண்டாக இருத்தல் போன்ற காரங்களாலும் ஏற்படலாம். பொதுவாக நாற்பது வயதுக்குமேல் தான் இதன் பாதிப்பு ஏற்படும்.

உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உடலையும், மனதையும் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டும். சீரான உடற்பயிற்சி "வோக்கிங்" யோகாசனம், ஆழ்நிலை தியானம் போன்ற பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

மருத்துவ நிபுணர்களே யோகாசனம், தியானம் என்பவற்றின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

"Bio Feed Back'' என்ற சிகிச்சை முறை தற்பொழுது வழக்கத்திலுள்ளது. மூளையின் அழுத்த அலைகளைப் பதிவு செய்து அதை திரும்ப உடலுக்குள் செலுத்தி இரத்த அழுத்தத்தை சீராக்கி விடுகிறார்கள்.

சிலபேருக்கு உயர் இரத்த அழுத்தம் Borderline இல் இருக்கும். இவர்கள் வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை (Behaviourial Modification) ஏற்படுத்திக் கொண்டாலே போதுமானது.

அதாவது பரபரப்பான வாழ்க்கை முறையை தவிர்க்க வேண்டும். புகைபிடித்தல், மது அருந்துதல் பழக்கங்களை கைவிட வேண்டும்.

சாப்பாட்டில் உப்பைக் குறைக்க வேண்டும். கொழுப்புள்ள உணவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். முடிந்தால் விட்டு விடலாம்.

நடுத்தர வயதுடையவர்கள் அடிக்கடி B.P செக் பண்ணிக் கொள்ள வேண்டும். மருந்துவ ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும்.

ஒரு ஆள் B.P என்று சொல்லி டாக்டரிடம் போனான்.

''உடம்பு குண்டாகி விட்டது. முதலில் அதைக் குறைக்க தினமும் உடற்பயிற்சி செய்!'' என்றார் டாக்டர்.

சரி என்று சொல்லி விட்டுவந்தான். கொஞ்சநாள் கழித்து மறுபடியும் டாக்டரிடம் போனான்.

''என்னப்பா எக்ஸசைஸ் செய்தாயா?'' என்று கேட்டார் அவர்.

"தினமும் செய்தேன் டாக்டர்" என்றான் அவன்.

"என்ன செய்தாய்?" என்று கேட்டார் டாக்டர்.

"முன்பெல்லாம் சிகரட்டை கடையில் தான் வாங்குவேன். இப்ப அதை நானே என்கையால் உருட்டி தயார் செய்கிறேன் டாக்டர்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ரணிலின் உயிர்காக்க மனைவி, சனி பகவானுக்கு எருமைக்கன்று தானம் வழங்கிப் பரிகாரம்

(சென்னை)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம சிங்கவின் மனைவி மைத்ரேயா, ஏடு ஜோதிடப்படி கணவனின் உயிரைப் பாதுகாக்க தமிழகத்தில் உள்ள குச்சனூர் சனிபகவான் கோவிலில் எருமைக்கன்று தானம் வழங்கி உள்ளார். இலங்கையில் யுத்தம் வலுத்து வரும் வேளையில் முக்கிய வி.ஐ.பி.க்களின் உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை உள்ளது. இதில் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரம சிங்கவின் உயிருக்கும் ஆபத்து ஏற் பட்டுள்ளது. இதனால், ஏடு ஜோதிடம் பார்த்து கணவனின் உயிரைக்காப்பாற்ற அவரது மனைவி மைத்ரேயா முடிவு செய்தார்.

சென்னை அருகேயுள்ள அச்சரபாக்கம் வந்த அவர், தனது கணவரின் எதிர்காலம், ஆயுள் குறித்து ஏடு பார்த்துள்ளார். அதில், ரணிலுக்கு சனி திசை நடப்பதாகவும், முன்னோர்களின் பாவ வினைகளின் படி சில பரிகாரங்களைச் செய்ய வேண்டும் என்றும் ஏடு ஜோதிடர்கள் கூறியுள்ளனர்.

இதையடுத்து ரணிலின் உயிருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப் போக்க பரிகாரம் செய்ய அவரது மனைவி முடிவு செய்தர். குச்சனூரில் உள்ள சனி பகவான் கோவிலுக்கு எருமைக்கன்று வழங்கி பரிகாரம் மேற்கொள்ள வேண்டும் என்ற ஜோதிடர்களின் ஆலோசனையை ஏற்று, கடந்த வாரம் இதற்காக குச்சனூர் கோவிலுக்கு மைத்ரேயா வந்தார்.

குச்சனூர் கோவிலுக்கு நேர்த்திக் கடனாக வழங்க எருமைக்கன்று வாங்கிய மைத்ரேயா, இளம் கன்றின் கழுத்தில் 19 துணிகள் கட்டி, கோவிலில் வலம் வந்து பூசாரியிடம் வழங்கினார். முன்னதாக ஏட்டில் அறிவுறுத்தப்பட்டிருந்த பரிகாரப்படி 27 எள் விளக்குகளையும், காக்கை பொம்மைகளையும் செலுத்தி வழிபட்டார். இறுதியாக 50 பேருக்கு அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் டோக்கன்கள் வாங்கி கொடுத்து அன்னதானம் செய்து புறப்பட்டுச் சென்றார்.

இது குறித்து, ஜோதிடர்கள் சிலர் கூறுகையில், ஒரு சிலருக்கு மட்டுமே கன்று வழங்கி பரிகாரம் செய்யும்படி அமையும். உயிரைப்பறிக்கும் எமதர்மராஜனின் சகோதரர் சனிக்கு வழங்க அதன் பாதிப்பு விலகும். எனவே, மைத்ரேயா இந்த வகை பரிகாரம் செய்துள்ளார் என தெரிவித்தனர். (அ-5)

# பாடசாலை நாட் குறைப்பு ஆசிரியர் சங்கங்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

பாடசாலை நேரத்தை அதிகரித்து. பாடசாலை நாட்களை கிழமையில் நான்கு நாட்களாகக் குறைக்கும் யோசனைக்கு ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கடும் எதிர்பைத் தெரிவித்துள்ளன.

நாளை மறுதினம் 4ஆம் திகதி, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதற்கான பரிந்துரையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க உள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. இதனால் எரிபொருள் பாவனையைக்குறைக்க முடியும். அதிகரித்துச் செல்லும் எண்ணெய் இறக்குமதியை குறைக்க இந்நடவடிக்கை அவசியம் என அரசாங்கம் தெரிவிக்கிறது.

இத் திட்டத்தைக் கைவிடுமாறு அமைச்சரைக் கேட்டுக்கொண்டுள்ளதாக இலங்கை ஆசிரியர்கள் சேவைச் சங்கப் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது மாணவர் சமூகத்தைப் பெரிதும் பாதிக்கும் என்பதால் இதை எதிர்க்கவுள்ளதாகவும் உண்மையிலேயே வாழ்க்கைச் செலவைக் குறைக்க அக்கறை கொண்டிருந்தால், வீண் விரையங்களையும் தவறான செயற்பாடுகளையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாடசாலை நாட்களை நான்காகக் குறைக்கும் முன்மொழிவு, எரிபொருட்பாவனையை குறைக்கும் நடவடிக்கையில் ஒரு பகுதியாகப் பரிசீலிக்கப்படுவதாக கல்வி அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த முன்மொழிவின்படி, இந்த நான்கு நாட்களிலும் பாடசாலை நேரம் 90 நிமிடங்கள் அதிகரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். இந்த யோசனை கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்படவில்லை யெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கங்கள் மற்றும் மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி எழுதியுள்ளேன். அவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் பதில்களைக்கொண்டு தீர்மானம் எடுத்து அதை அமைச்சரவையின் அடுத்த கூட்டத்தில் எடுத்துரைப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான சிற்றூர்திகள், பஸ்கள் மற்றும் தனியார் வாகனங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான லீற்றர் எரிபொருள் சேமிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை இத்திட்டம் போக்குவரத்து அமைச்சினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இராசிபலன்

02.06.2008
(வைகாசி 20, திங்கட்கிழமை)
திரேயோதசி காலை 06.43 மணிவரை
பரணி முற்பகல் 11.29 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 4.17 மணிவரை
இராகுகாலம் 07.22-08.52 மணிவரை
சுபநேரம்-11.52-01.22 மணிவரை
கார்த்திகை விரதம்


| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும். சுபசெலவு. |
| இடபம் | புதிய முயற்சி. திடீர் நன்மை, தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுபசெலவு, முயற்சிகைகூடும், பிரயாணம். |
| கடகம | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வநம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை, பிறர்உதவி. |
| கன்னி | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சிதாமதம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக்குறைவு. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, காரிய அனுகூலம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசனசுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், திடீர்நன்மை, ரோகநிலை. |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர்உதவி, குடும்பசுகம். |

வளவன்

# மோதலினால் வெளியேறும் மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சம்

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடரும் மோதல்களால் இம் மாவட்ட எல்லையோர கிராமங்களில் இருந்து வெளியேறிய மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சம் அடைகின்றனர்.

வீடுகள் இன்றி தவித்துவரும் இம்மக்கள் வீதியோரங்களிலும், பொது கட்டடங்களில் தங்கி இருக்கின்றனர். இவர்களுக்கு உணவு வழங்கப் பட்டு வருவதாகவும், இவர்களுக்கு தற்காலிக கூடாரங்களை வழங்கு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும்கிளிநொச்சிஅரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் கூறினார். (அ-5)



நல்லூர் தெற்கு சிறீ விக்னேஸ்வரா வித்தியாலய விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண வலயக் கல்வி உடற்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி மங்கலவிளக்கேற்றுவதையும் வித்தியாலய அதிபர் திருமதி விமலநாதன் மிமலாதேவி மற்றும் விருந்தினர்களையும் படத்தில் க்ாணலாம்.

# நாவற்குழி வீடமைப்புத் திட்டம் குடியிருப்பாளருக்கு உறுதிகள் கையளிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வீட்டுத்திட்டம் யாழ் அரச அதிபரினால் கையேற்கப்பட உள்ளதாகவும் அதன் பின்னர் அவ்வீட்டுத் திட்டத்தில் தொடர்ந்து குடியிருந்து வருபவர்களுக்கு உறுதிகள் கையளிக்கப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தின் உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சரை அவரது யாழ் .அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உறுதிகள் கையளிக்கப்பட்டதன் பின்னர் அவ் வீடமைப்புத் திட்டத்தின் புனரமைப்புப் பணிகள் யாவும் உரிய முறையில் மேற்கொள்ளப்படும் என்றும், உறுதிகளைப் பெற்றுக் கொள்வோர் தொடர்ந்து அங்கு குடியிருக்க வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்துள்ளதுடன் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மேம்பாடுகள் குறித்து நாளடைவில் பல்வேறு புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

(அ)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 16ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறமும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் 18ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(அ-7)

# மூன்று மாதத்துக்கு தேவையான பரசிற்றமோல் எடுத்து வரப்பட்டுள்ளது

## வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கு 3 மாத காலத்திற்குள் தேவையான 7இலட்சம் பரசிற்றமோல் குளிசைகள் ப்ளின் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் 11 இலட்சம் பரசிற்றமோல் குளிசைகள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றை விரைவில் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி 11 இலட்சம் பரசிற்றமோல் குளிசைகளும் எடுத்துவரப்பட்டால் மொத்தம் 18 இலட்சம் குளிசைகளும் இவ்வருடத்திற்கு போதும்என குறிப்பிட்ட யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் சுகாதார அமைச்சகம் 3ஆம் , 4ஆம் காலாண்டிற்கான மருந்துகளுடன் பரசிற்ற மோல் வில்லைகளையும் அனுப்பி வைக்கும் எனவும் தெரிவித்தார்.

(அ-5)

# யாழ். போதனாவைத்தியசாலையின் குறைபாடுகளை நீக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் குழுவொன்று கடந்த30ஆம் திகதி மாலை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து யாழ் போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது, உடனடியாக கொண்டு வரகூடிய அவசர மருந்து வகைகளைக் கொண்டு வருவதில் நிலவும் தடைகள் பற்றிய கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது அவ்வாறான மருந்து வகைகள் கொண்டு வரப் படும் போது தனது கவனத்திற்குக் கொண்டு வந்தால் தன்னால் அவற்றைத் தாமதமின்றி கொண்டு வருவதற்கு வழிசெய்து தரமுடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா தெரிவித்துள்ளார்.

இதேபோன்று வைத்தியசாலைக்குத் தேவையான எக்ஸ்ரே கருவிகள் உபகரணங்கள் மற்றும் வாகனங்களையும் தாமதமின்றிக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளை செய்து தருவதாகத் தெரிவித்த அமைச்சர் வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நீக்குவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதாகவும் கட்டிட வசதிகளையும் வைத் தியர்கள் மற்றும் தாதிமார் விடுதிகளையும் பூரணப்படுத்தித் தருவதற்கும் அதற் கான நிர்மாணப் பணிகளின் குத் தகையை உள்ளூர் ஒப்பந்தக் காரர்களிடம் வழங்குவதற்கும் தான் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தெரிவித்தார்.



அத்துடன் போதனா வைத்தியசாலையை விஸ்தரிக்கும் முகமாக காணி பற்றாக்குறை குறித்து முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் டக்களஸ் தேவானந்தா வைத்தியசாலையை அண்டியுள்ள இலங்கை மின்சார சபைக்குரிய காணியை பெற்றுக்கொள்வதற்கும், மின்சார சபைக்கு வேறோரிடத்தில் காணியைப் பெற்றுக் கொடுப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச் சந்திப் பின்போது யாழ் அரச அதிபர் கே. கணேஸ் உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(அ)

# மோட்டார் சைக்கிள் உரிமைப்பத்திரம் ஒரு வார காலத்துள் வழங்க ஏற்பாடு


## ஆணையாளர் வி. பத்மநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமைப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பத்தை யாழ். மோட்டார்போக்குவரத்து திணைக்களத்தில் சமர்ப்பித்தால் ஒரு வார காலத்திற்குள் பதிவு செய்யப்பட்டு உரிமைப் பத்திரம் வழங்கப்படுமென யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

அத்துடன் உரிமை மாற்றம் செய்வதற்கான விண்ணப்பத்தையும் யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சரியான முறையில்பூரணப்படுத்தப்பட்டு ஒப்படைத்தால் ஒரு மாத காலத்திற்குள் உரிமை மாற்றம் செய்யப்பட்டும் வழங்கப்படு மெனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் பலர் தமது விண் ணப்பங்களை கொழும்பில் சமர்ப்பித்து பெற்று வருகின்றனர் எனவும் குறிப்பிட்ட உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் குறிப்பிட்ட மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள அலுவலகத்தில் சமர்ப்பித்தால்விரைவில் பெற்றக் கொள்ளக் கூடிய வகையில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.




# கசிப்பு விற்றவருக்கு, ஒரு இலட்சம் அபராதமும் ஒரு வருடச் சிறையும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பொலிஸார் சட்டவிரோத கசிப்பு விற்பனை செய்தாரெனக் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்த கசிப்பு விற்பனையாளருக்கு 1இலட்சம் ரூபா அபராதமும் 1வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்த பருத்தித்துறை நீதிபதி கே.அரியநாயகம் அபராதத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார். இவர் இதற்கு முன்னரும் மூன்று தடவை கசிப்பு விற்பனை செய்த குற்றத் திற்காக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தண்டனை பெற்றவராவர்.

இவரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கசிப்பு மன்றின் உத்தரவுப்படி அழிக்கப் பட்டது.

(அ-52)

# சதாசகாய அன்னை ஆலயத்திருவிழா

(இளவாலை)

இளவாலை சகாயபுரம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தின் திருவிழா பங்குத் தந்தை அருட்பணி ஞானேந்திரன் அடிகளார் தலைமையில் கடந்த 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

திருநாட் திருப்பலி எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை யாழ் .ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் ஒப்புக் கொடுக்கப்படும். இவ்வலாலயம் நிர்மாணிக்கப்பட்டு 25ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் முகமாக புதிதாக ஆலய முன் மண்டபம் அமைக்கப்பட்டு திருநாள் திருப் பலி நடை பெறவிருப்பதும் இவ் விழாவின் சிறப்பம்சமாகும்.

(அ-5)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் புலோலியில் திடீர் பரிசோதனை

பருத்தித்துறை, புலோலி வர்த்தக நிலையங்கள் மீது பொது சுகாதாரப் பரிசோதகர்கள் குழு திடீர் பரிசோதனைகளை நடாத்தி வருகின்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற இத் திடீர் பரிசோதனைகள் குழுவினரிடம் பலசரக்குக் கடைகள், பேக்கரிகள், உணவுச் சாலைகள் உட்பட விற்பனைக்குதவாத உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 14விற்பனை நிலையங்களில் இருந்த பாவனைக்குதவாத பிஸ்கட், சொக்லேட், ரொபி வகைகள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

விற்பனை செய்தவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

(அ-52)

# பிரசித்த நொத்தாரிசாக நியமனம்



கோண்டாவில் மேற்கு புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சிவ பாக்கியம் முத்துக்குமாரசுவாமி யாழ்ப்பாணம் நீதி பரிபாலன வலயத்திற்கான பிரசித்த நொத்தாரிசாக உள்நாட்டு அலுவர்கள் அமைச்சரினால் அண்மையில் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ பி.சுவுர்ணராஜ் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அகில இலங்கைச் சமாதான நீதவானும், சத்திய மொழிபெயர்ப்பாளரும், வடவலய தொழில் திணைக்களத்தின் உதவித் தொழில் ஆணையாளருமாவார்.

(அ-4)







மாதனை மெ.மி.த.க. பாடசாலையின் ஆண்டுவிழாவும் பரிசளிப்புவிழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியத்தினால் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. இரகுநாதன் மாலையிட்டு வரவேற்கப்படுவதையும், அருகில் புலோலி மெ.மி.த.க.பாடசாலை அதிபர் க.சண்முகராஜா, ஆரம்பக் கல்விச் சேவைக்கால ஆலோசகர் சி.தில்லைநாதன், விசேடகல்வி சேவைக்கால ஆலோசகர் எஸ்.புவனேந்திரன், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் எஸ்.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் காணப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினரும் ஏனையோரும் மாணவர்களால் மலர்தூவி வரவேற்கப்படுவதை இரண்டாவது படத்திலும், பாடசாலை அதிபர் க.சுப்பிரமணியம். எஸ்.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.



நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே.அரியநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், உதயன் பத்திரிகையின் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், அரியநாயகம் தம்பதிகள், யாழ்ப்பாண தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் வீ.அருளானந்தம், வைத்திய கலாநிதி வை.தியாகராஜா கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உப அதிபர் கணபதிப்பிள்ளை ஆகியோர் நிற்பதையும் சயன்ஸ் அக்கடமியின் இயக்குநர் சரா.புவனேஸ்வரன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதி மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# வெள்ளவத்தை குண்டு வெடிப்புத் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 13 தமிழர்கள் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை, ராஜசிங்க வீதிக்கு அண்மையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 13 தமிழர்களை வெள்ளவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பஸ் தரிப்பிடத்தில் பயணிகளுடன் காத்துக் கொண்டிருந்த ஒருவரிடமிருந்த கைக்குண்டே வெடித்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியதாவது,

வெள்ளவத்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினரால்மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளின்போது குறித்த பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த ஒருவராலேயே மேற்படி குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

இதன்போது குண்டினை வெடிக்க வைத்தவரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அவர் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த தாக்குதலில் சுமார் 10பேர் வரை படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மேற்படி குண்டினை வெடிக்க வைத்தவர் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து குறித்து பிரதேசத்தில் பொலிஸாரால் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 13 தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்களிடமிருந்து வாக்கு மூலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறித்த குண்டுவெடிப்பானது மோட்டார் சைக்களில் வந்த இருவராலேயே மேற்கொள்ளப்பட்டதாக சம்பவம் இடம்பெற்றபோது பொலிஸார்மேற்கொண்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளபோதிலும் தற்போது இச்சம்பவத்தில் திருப்புமுனை ஒன்று ஏற்பட்டுள்ளது. இத்திருப்பு முனையை அடுத்து பொலிஸாரின் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை சம்பவத்தின்போது காயமடைந்த 10பேரின் உடல்நிலை தற்போது தேறி வருவதாக களுபோவில வைத்தியசாலையின் பணிப்பாளர் குமாரசிறி தெரிவித்தார்.

இந்தக் குண்டுத்தாக்குதலில் இரண்டு அப்பாவி தமிழ்ப் பொதுமக்கள் பலியாகியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

## சங்காபிஷேகம்

அராலி ஆவரம்பிட்டி அருள்மிகு சிறி முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த நவோத்ர சகஸ்ர மகா கும்பாபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும்.

மாலை 3 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (ச)

## நவம்பர் மாதம் வரை சம்பள உயர்வு இல்லை

நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் வரையில் அரச ஊழியருக்கு எவ்வித சம்பள அதிகரிப்பும் மேற்கொள்ளப்படமாட்டாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சம்பள உயர்வை மேற்கொள்வதனை விடப் பொருட்கள் சேவைகளுக்கான விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலையேற்றத்தை கட்டுப் படுத்த பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பின்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மாதத்தில் 15-20 வீதம்வரையிலான சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக தொழில் உறவு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கருணாவை நாடு கடத்துவதில் பிரித்தானிய அரசு தீவிரம்

(கொழும்பு)

கருணாவை இலங்கைக்கு நாடு கடத்தும் முயற்சிகளில் பிரித்தானியா தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கருணாவை நாடு கடத்தும் திட்டத்தின் முதற்படியாக அவரை நாடு கடத்துவதற்கு தேவையான பத்திரங்களை பிரித்தானிய அதிகாரிகள் பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பியுள்ளதுடன், அவருக்கான பயன ஆவணத்தையும் கோரியுள்ளனர்.


இது தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளபோதும், கருணாவை வெளியேற்ற பிரித்தானியா தீவிரமாக செயற்பட்டு வருவதாக பிரித்தானியாவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக அனுப்பப்பட்ட கடவுச் சீட்டின் அடிப்படையில் இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகம் கருணாவுக்கான விசாவை வழங்கியது பிரித்தானியாவுக்கு பெரும் சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது.

எனவேதான் பிரித்தானியா கருணாவை வெளியேற்றுவதில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

கருணா விசா பெற்றுக் கொண்டதற்கும் தமக்கும் எவ்வித தொடர்புகளும்இல்லை என இலங்கை அரசு தெரிவித்துள்ளபோதும், கருணாவால் சமர்ப்பிக்கப்பட்ட ராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டு அரசினால் வழங்கப்பட்டதென்பதில் பிரித்தானிய அதிகாரிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

ஹார்மொன்ட்வேர்த் என்ற இடத்திலுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கருணா சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானமூடாக நேரடியாக அனுப்பப்படலாமென தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)



யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தின் அஞ்சலிக் கூட்டம் கலட்டியிலுள்ள அவரது சகோதரனின் இல்லத்தில் நடைபெற்றது. இவ் அஞ்சலி நிகழ்வில் அவரது பெறாமகன் ம.ரவிசங்கர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும், கலாநிதி க.குணராசா அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# அம்பாறை மாவட்டத்துக்கான சர்வமத சம்மேளன அங்குரார்ப்பணம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட சர்வசமய சம்மேளன அங்குரார்ப்பண பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் சாய்ந்தமருது பரடைஸ் விடுதியில் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் டாக்டர் எட்.ஜ.எம்.ஜெமீல் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்திலுள்ள இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த நூறு பிரதிநிதிகள்கலந்து கொண்டனர்.

மாவட்டத்திலுள்ள இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த 4 தலைவர்கள் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வண. ரண்முத்துகல சங்கரத்ன தேரர், சிவஸ்ரீ சிவஞானச்செல்வக் குருக்கள், மௌலவி எஸ்.எச்.ஆதம்பாவா, வண.போதகர் கலிஸ்டா கோமஸ் ஆகியோர் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் ஏ.எம்.பாறூக் பணிப்பாளராகவும், எம்.எஸ்.ஜலீல் செயலாளராகவும் டாக்டர், கே.பரராசசிங்கம் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த கே.பி.சுனில் சாந்த விரி.சகாதேவராஜா, ஜே.எம்.இப்றாகிம், போதகர் கிருபைராஜா அன்ரனி ஆகியோர் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 17 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கலாநிதி ஜெஸிமா இஸ்மாயில் அவர்களது சிந்தனையின் வெளிப்பாடாக இச் சம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது.

அவரை போசகராக அவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அதேபோல் ஏற்பாட்டுக் குழுத்தவைர் டாக்டர் எட்.ஜ.எம்.ஜெமீல் அவர்களை உப போசகராக அவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

(ச-5)

# ஊடக அடக்கு முறையின் தந்தை ஐக்கிய தேசியக் கட்சியினரே!

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடக அடக்குமுறைச் செயல்களின் தந்தை ஐக்கிய தேசியக் கட்சியே என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிலுமின வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ஊடகங்களுக்காக குரல் கொடுப்பது நகைச்சுவையான சம்பவம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அதிகளவான ஊடகவியலாளர்கள் உடல் உள ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு ஊடகவியலாளர்களை நேரடியாக அச்சுறுத்தியுள்ளதாகவும் அவர்களின் பெயர் பட்டியல் ஒன்றையும் அமைச்சர் ராஜித வெளியிட்டுள்ளார்.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கூட கடுமையாக விமர்சிப்பதற்குத் தற்போதைய ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

# சகல மாகாணங்களிலும் இரகசியக் கமரா நிறுவ சீன அரசுஅதிரடித் திட்டம்

சீனாவில் எல்லா மாகாணங்களிலும் துருவித்துருவி கண்காணிக்க பல லட்சம் ரகசிய வீடியோ கமராக்களை நிறுவ சீன அரசு திட்டமிட்டுள்ளது. அரசுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க சீன அரசு தங்க கவச கண்காணிப்பு திட்டம் என்று புதுத் திட்டத்தை அமுல்படுத்த உள்ளது. இதன் ஒரு கட்டமாக எல்லா மாகாணங்களிலும் சக்தி வாய்ந்த ரகசிய குளோஸ்ட் சர்க்கியூட் கமரா, டிவி கமராக்களை வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வீதியில் உள்ள மின்சார கம்பம், உயர மான கட்டங்கள், சுரங்க பாதைகள் என்று எல்லா வற்றிலும் கமராக்களை வைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. வன்முறையில் இறங்குவோர் சதிச் செயல் செய்வோர் போன்றவர்களை கண்காணித்து தண்டனை தர அரசு முடிவு செய்துள்ளது. கொம்யூட்டர், டிஜிட்டல் வசதிகள் வைத்து இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சீனாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் தேசிய அடையாள அட்டை தரப்படுகிறது. அதில் பயோமெட்ரிக் தொழில் நுட்பத்தின் மூலம் குறிப்பிட்ட நபர் குறித்த விவரங்கள் பெற முடியும். கமரா காட்டிக்கொடுக்கும் நபர் பற்றி அறிய அவரின் கொம்ப்யூட்டர் ஜாதகத்தை பார்க்கலாம். கமராவில் படம்பிடிக் கப்பட்டவரின் உருவத்தை கொம்ப்யூட்டார் ஏற்றுக் கொண்டதும் அவர் பற்றிய விவரங்களை அளிக்கிறது. அதை வைத்து சம்பந்தப்பட்ட நபர் பற்றி விவரங்களை அளிக்கிறது அதை வைத்து சம்பந்தப்பட்ட நபர் அரசுக்கு எதிராக போராட்டம்செய்தவர் என்று உறுதி செய்யப்படுகிறது. (அ)



அமெரிக்காவின் கேப் கெனவரல் விண்வெளி ஆய்வுத்தளத்திலிருந்து டிஸ்கவரி விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப் பட்டது.

# எதியோப்பியாவில் 25பேர் பலி வெள்ளம் அடித்துச் சென்றது

(அட்டிஸ் அபாபா)

எதியோப்பியா நாட்டின் கிழக்கு பகுதியான ஜிஜிகா நகரில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் அந்த நகரில் உள்ள ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அங்குள்ள ஏரி, குளங்களும் நிரம்பி உடைப்பெடுத்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு ஜிஜிகா நகரின் கரையோர பகுதிகளில் வசித்தவர்கள் வீடுகளை வெள்ளம் அடித்துச் சென்றது. இதில் தூங்கிக் கொண்டிருந்த 25பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். அவர்கள் அனைவரும் உயிரிழந்து விட்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் உடல்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஜிஜிபா நகரில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் அந்நகர விமான நிலையம் மூடப்பட்டது. (அ-5)

# இதுவரை தென்படாமல் இருந்த பழங்குடி இனம் கண்டு பிடிப்பு

(பிரேஸில்)

இந்த அபூர்வமான பழங்குடியினர் உடம்பெங்கும் செம்மஞ்சள் மற்றும் கறுப்பு நிறத்தை பூசியிருக்கின்றனர். இவர்களின் இனம் எதுவென்று இதுவரை தகவல் வெளியாகவில்லை.

ஹெலிகொப்டரில் இருந்து எடுக்கப்பட்ட அற்புதமான புகைப்படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

ஹெலிகொப்டரில் இருந்து படம் எடுக்கும் போது அவர்கள் அதை நோக்கி அம் பெறிந்தமை குறிப்பிடத்தக்கது. பிரேஸில் நாட்டின் ஏக்கர் மாநிலத்தின் பெரு நாட்டின் எல்லைப் பகுதியில் இந்த இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# பத்தாம் திகதிக்குள் பதவி விலக பாக் அதிபர் முஷரப்புக்கு கெடு

(லாகூர்)

ஜூன் 10ஆம் திதிக்குள் பாகிஸ்தான் அதிபர் முஷரப் ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஆசிப் அலி சர்தாரி கெடு விதித்து இருக்கிறார்.

பாகிஸ்தானில் மக்கள் கட்சி–முஸ்லீம் கட்சி கூட்டணி ஆட்சி பெற்று வருகிது. அதிபர் முஷாரப் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று ஆளும் கூட்டணி கட்சி வற்புறுத்தி வருகிறது. ஆனால் பதவி விலக முடியாது என்று அதிபர் முஷரப் திட்ட வட்டமாக அறிவித்து விட்டார்.

எனவே முஷரப்பை பதவியில் இருந்து இறக்குவது பற்றி பிரதமர் யூசுப் கிலானி தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டம் லாகூரில் நடந்தது.

இந்த கூட்டத்துக்கு பிறகு பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவர் ஆசிப்அலி சர்தாரி கூறியதாவது,

அதிபர் முஷரப் ஜூன் 10ஆம் திகதிக்குள் அவராக முன்வந்து பதவி விலக வேண்டும். இதுதான் அவருக்கு கௌரவமானது. இல்லாவிட்டால் அவர் மீது பாராளுமன்றத்தில் உரிமை மீறல், கண்டன தீர்மானம் கொண்டு வந்து அவரை பதவியில் இருந்து விரட்ட நேரிடும். இவ்வாறு ஆசிப்அலி சர்தாரி கூறினார். (அ-5)

# போதை கும்பலுக்கு எதிராக இளவரசர் வில்லியம்ஸ் கரிபியன் கடலில் கண்காணிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்ள்சின் மூத்த மகன் வில்லியம்ஸ். 25 வயதான வில்லியம்ஸ் இராணுவ கல்லூரியில் சேர்ந்து பயிற்சியை முடித்தவர் முறைப்படி இராணுவத்திலும் அவர் சேர்க்கப்பட்டார்.

இராணுவத்தின் ஒரு படைப்பிரிவுக்கு தலைவராக நியமிக்கப்பட்ட வில்லியம்ஸ் கரிபியன் கடல் பகுதியில் கண்காணிப்பு பணிக்கு அனுப்பப்படுகிறார். எச்.எம். எஸ் அயன் டியூக் என்ற போர்க்கப்பலில் அவர் அனுப்பிவைக்கப்படுகிறார்.

கரிபியன் கடல் பகுதியில் இருந்து பல் வேறு நாடுகளுக்கு போதை பொருட்களை கடத்தும் கும்பலுக்கு எதிராக வில்லியம்ஸ் பணியில் ஈடுபடுவார். ஹெலிகொப்டரிலும் பறந்து சென்று கண்காணிப்பார் இந்த பணிகளுக்கு இடையே கரிபியன்நாடுகளின் புயல் பாதித்த பகுதிகளில் நிவாரண பணிகளையும் கவனிப்பார்.

இளவரசர் என்ற அந்தஸ்து மதிப்பு, மரியாதை எதுவும் அவருக்கு கொடுக்க மாட்போம். மற்ற இராணுவ வீரர்களை போலத்தான் அவரும் நடத்தப்படுவார் என்று உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-5)

# காய்கறி, பழம் சாப்பிட்டால் புற்றுநோயைத் தடுக்கலாம்

(நியூயோர்க்)

பழங்கள், காய்கறிகளை தினமும் சாப்பிட்டு பாலில்லாத தேநீர் அருந்தும் பழக்கமுள்ள வர், சிகரெட் பிடிப்பவராக இருந்தாலும் அவருக்கு நுரையீரல் புற்றுநோய் வரும் வாய்ப்பு குறைவாக இருப்பதாக ஒரு ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சிகரெட் பிடிப்போர், நுரையீரல் புற்றுநோய்க்கு ஆளாகிறார்கள். அவர்கள் தினமும் காய்கறி, பழங்கள் சாப்பிட்டுக் கொண்டு தினமும் பாலில்லாத தேநீர் குடித்துவந்தால், நுரையீரல் புற்றுநோய் வராமல் தடுக்கலாம் என்று அமெரிக்காவில் விஞ்ஞானிகள் நடத்திய ஆயில் தெரியவந்துள்ளது. காய்கறிகள், பழங்கள், கறுப்பு தேநீர் ஆகியவை இயற்கையான இராசாயனங்கள் ஆகும்.

அந்த இரசாயனத்துக்கு 'பிளேவனாய்ட்ஸ்' என்று பெயர். நுரையீரலில் புற்றுநோய் செல்கள் வளர்வதை இந்த பிளே வனாய்ட்ஸ் இரசாயனம் அழித்துவிடுகிறது.

கீரை, வெங்காயம், பீன்ஸ், ஆப்பிள்போன்றவற்றில் இந்த பியேவனாய்ட்ஸ் இரசாயனம் உள்ளது. சிகரெட்பிடிப்பதால்ஏற்படும்பாதிப்புகள் இதனால் குறைகிறது. (அ-5)

# லண்டனில் இரு தமிழ் சிறுவர் கொலை தந்தையும் தாயும் பொலீசாரால் கைது

தெற்கு லண்டனில் இலங்கைச் சிறுவனும் சிறுமியும் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அக் குழந்தைகளின் பெற்றோரை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தெற்கு லண்டனிலுள்ள கார்ஷல்டன் எனும் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அவர்களின் ஆறு மாதக் குழந்தை கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறது. அக்குழந்தையின் உடல்நிலை தேறிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக் குழந்தையின் தயாரான 35 வயதுடைய சசிகலா நவநீதன் 39 வயதான தந்தை நவநீதன் ஆகியோரை கைது செய்து வெவ்வேறு பொலிஸ் நிலையங்களில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தந்தை நவநீதன் கார்ஷல்டன் பகுதியில் ஒரு கடையை நடாத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தாயே குழந்தைகளை கத்தியால் குத்தி விட்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அண்மைக் காலத்தில் அவர் மன நிலை பாதிக்கப்பட்டு இருந்திருக்கலாம் என்றே நாம் நம்புகிறோம் என அவர்களின் உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-5)

## மியன்மாரில் 8 பேர் எரித்து கொலை

(யங்கோன்)

மியன்மார் நாட்டின் தீவிரவாதிகள் மரப்பட்டறை ஒன்றுக்கு தீ வைத்ததில் அதில் பணியாற்றி கொண்டிருந்த 8 பேர் எரித்துக்கொல்லப்பட்டனர்.

ஷான் படையினர் கடந்த புதன்கிழமை இரவு இந்த தாக்குதலை நடத்தியதாக மியன்மார் இராணுவ அரசின் அதிகார பூர்வ நாளேடான நியூலைட் ஒப்மியன்மார் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தீவிரவாதிகள் கிராம அதிகாரி ஒருவரையும் கடத்திச் சென்று விட்டனர். இதையடுத்து அரசுப்படை தீவிரவாதிகளை தேடும் வேட்டையில் ஈடுபட்டுள்ளது.

மியன்மார் இராணுவ அரசு ஏற்கனவே 17 தீவிரவாத அமைப்புக்களுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. எனினும் சில தீவரவாத அமைப்புகள் தொடர்ந்து மியன்மாரில் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## உலக தரிசனம்

# சீன பூகம்ப இடிபாடுகளிலிருந்து காப்பாற்றப்பட்ட எட்டு ஆயிரம் சிறுவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(சீனா)

சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தை அடுத்து காப்பாற்றப்பட்ட 8 ஆயிரம் சிறுவர்கள் அவர்களனின் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

இதேவேளை மேலும் ஆயிரம் சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக சிசுவான் மாகாண சிவில் விவகாரத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஜிலு தெரிவித்துள்ளார்.

இதுவரை பெற்றோரிடம் ஒப்படைக்கப் படாத சிறுவர்களை தத்தெடுப்பதற்காக சீனா உட்பட ஏனைய நாடுகளின் சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலிருந்து அடிக்கடி வேண்டு கோள்கள் வருகின்றபோதிலும் இந்த ஆயிரம் சிறுவர்களையும் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கே முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் மே 12 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தையடுத்து இதுவரை 18ஆயிரம் மக்கள் காணாமல் போயுள்ளதுடன் 5 மில்லியன் பேர் வீடுகளை இழந்துள்ளதாகவும் சீன தரவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 ஆயி



ரத்து 858 ஆக அதிகரித்துள்ள போதும் இவ் எண்ணிக்கை 80,000 ஆகமேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக ஜிலு குறிப்பிட்டிருக்கிறார். (அ-5)

# இந்தியா (தமிழ்நாட்டில்) உயர்கல்வி

இந்தக் கட்டுரையின் நோக்கமாவது இந்தியாவில் (குறிப்பாக தமிழ்நாட்டில்) உயர்கல்வி பற்றிய அடிப்படை அறிவினையும் ஒரு சமுதாய விழிப்புணர்வை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஏற்படுத்துவதாகும்.

ஒரு சமீபத்திய தரவு கூறுகிறது, ஆண்டு தோறும் இலங்கையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மாணவர்கள் A/L பரீட்சைக்கு தோற்றுகிறார்கள். அவர்களில் 18ஆயிரம் மாணவர்களே பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகின்றார்கள். ஏனையோரில் கணிசமான அளவினர் வெளிநாடுகளில் உயர் கல்வியை தொடர விரும்புகிறார்கள். பலமாணவர்கள் சித்தியடைந்தும், திறமை இருந்தும் பல்கலைக்கழக தரப்படுத்தலால் அனுமதி கிடைக்காமல் அல்லது விரும்பிய துறைகளில் இடம் கிடைக் காமல் மறுபடியும் பரீட்சை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் மேலும் ஒரு வருடத்தினை வீணடித்து, கால விரயம் செய்து மறுபடியும் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளுக்காக காத்திருந்து இப்படியான குழப்ப நிலையில் உள்ளவர்களுக்கு இந்தக் கட்டுரை ஒரு தெளிவான முடிபெடுக்க உதவும்.

**தமிழ் நாட்டில் கல்வி கற்பதால் உள்ள சில நன்மைகள்**

♦ இங்கே பாடத்திட்டங்கள் உரிய காலத்தில் ஆரம்பித்து உரிய நேரத்தில் முடிக்கப்பட்டு மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திலும் பட்டதாரி ஆகிவிடுகிறார்கள்.

♦ எந்த விதமான புறச்சூழலும் கல்வியைப் பாதிக்காத வகையில் அமையப் பெற்றுள்ளது.

♦ கட்டணங்கள் நியாயமானவையாகவும் வாழ்க்கைச் செலவு ஒப்பீட்டளவில் குறைவாகவும் உள்ளது.

♦ தமிழ்மொழி, கலாசாரம் என்பன ஒன்று என்பதால் இலகுவாக குறிப்பிட்ட சூழலில் மாணவரை உள்வாங்கக் கூடியதாக இருத்தல்.

♦ கல்வியின் தரமானது மேலைத்தேய நாடுகளுக்கு இணையாக மிகக் குறைந்த செலவுடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் உலகத்தில் வளர்ந்து வரும் சவால்களை சந்திப்பதற்கு ஒவ்வொரு மாணவரும் அவரவர்க்கு பொருத்தமான துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் அவசியமாகிறது.

இதற்கு ஆகக் குறைந்தது O/L & A/L சித்தி அடைந்திருத்தல் போதுமா னது என்பது பலரும் அறிந்திராத ஒரு விடயம்.

**தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்கள்**

இலங்கையைப் போன்றே தமிழ் நாட்டிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்துப் பீடங்களையும் திறமையான மாணவர்களையும் உள்ளடக்கி நிர்வகிக்கப்படுகின்றன.

எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒரே வகையான கல்வியை வழங்குவதில்லை. ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் ஒவ்வொரு துறைகளில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றன.

**பல்கலைக்கழங்கள்**

♦ *அண்ணா பல்கலைக்கழகம்*

இப் பல்கலைக்கழகம் பொறியியல் (Engineering) துறையில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றது. தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான பொறியியல் கல்லூரிகள் எல்லாம் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டவையே. (Affiliated Colleges)

நிர்வாகத்தை சிறப்பாக செய்வதற்காக அண்ணா பல்க்லைக்கழகம் நான்கு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது.

அண்ணா பல்கலைக்கழகம் -சென்னை
அண்ணா பல்கலைக்கழகம் - கோயம்புத்தூர்
அண்ணா பல்கலைக்கழகம் -திருச்சி
அண்ணா பல்கலைக்கழகம் - திருநெல்வேலி

இவை எல்லாவற்றிலுமாக ஏறத்தாழ 300 கல்லூரிகள் இணைந்து செயல்படுகின்றன.

♦ **DR.M.G.R.** *பல்கலைக்கழகம்*

இப்பல்கலைக்கழகம் மருத்துவம் சம்பந்தமான கல்வியினை வழங்குகின்றது.

♦ **DR.** *அம்பேத்கர் சட்டக்கல்லூரி*

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
- சென்னைப் பல்கலைக்கழகம்
- பெரியார் பல்கலைக்கழகம்
- மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
- பாரதியார் பல்கலைக்கழகம்
- பாரதிதாசன் பல்கலைக்கழகம்

இவை இலங்கையில் உயர்தரத்தில் (A/l), கலை (Arts), விஞ்ஞானம் (Science), வர்த்தகம் (Commerce) ஆகிய துறைகளில்படித்த மாணவர்களுக்கான உயர் கல்வியை வழங்குகின்றன.

**கல்லூரிகள்**


இந்தியாவில் உள்ள மாணவர்களுடன் ஒப்பிடுகையில், பல்கலைக்கழகங்களில் உள்ள



S.ஜெயக்காந்
இயக்குநர்
V4 educational consu ltancy Private Limited.
**Email :-** V4 educational consu ltancy @ gmail.com
**Mobile :-** 0773867257

இடங்கள் பற்றாக்குறையாக உள்ள படியால் பல்கலைக்கழகங்கள் தனியார் கல்லூரிகளின் உதவியுடன் தமது பாடத் திட்டத் தினை நடைமுறைப்படுத்துகின்றன.

கட்டணங்கள் யாவும் கல்லூரியினாலேயே அறவிடப்படுகின்றன. ஆகவே ஒரே தரத்திலான கல்வி (Syllabus) வழங்கப்பட்ட போதும் கல்லூரிகள் அறவிடும் கட்டணங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன.



பொதுப் பரீட்சைகள் யாவும் பல்கலைக் கழகத்தினால் எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டு கணிப்பீடுகள், முடிவுகள் என்பன பல்கலைக்கழகத்தினாலேயே வழங்கப்படுகின்றன. குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள எந்தக் கல்லூரியில் படித்திருந்தாலும் பட்டமானது (Degree) பல்கலைக்கழகத்தின் பெயராலேயே வழங்கப் படுகின்றது.

**கல்வித்துறைகளும் பாடப்பிரிவுகளும்**

♦ *பொறியயில்* **(Engineering)**

காலம் : 4 வருடம்

பாடப்பிரிவுகள்:-1.Civil Engineering, 2.Electrical & Electronics Engineering, 3.Mechanical Engineering,4.Fashion Technology, 5.Computer Science & Engineering,6.Electronics & Communication 7.Information Technology, 8.Aero nautical Engineering, 9.Mecha tronics

வழங்கப்படும் பட்டம் B.E (Bachelor of




Engineering)

*அனுமதிக்கான அடிப்படைத் தகுதி:* -

உயர்தரத்தில் (A/L) கணிதப் பிரிவில் 3 பாடங்களில் (Combined maths, physics & Chemistry) சித்தியும் குறைந்த பட்சம் சாதாரண தரத்தில் (O/L) ஆங்கிலப் பாடத்தில் சித்தி அல்லது வேறு ஏதாவது ஆங்கில கற்கைநெறியில் சித்தி.

♦ *மருத்துவத்துறை* **(Medicine)**

1.MBBS காலம் : 5 1/2 ஆண்டுகள்
2.M.Pharmacy
3.Dental
4. Nurising போன்ற கல்வித்துறைகள்

*அடிப்படைத்தகுதி*: -உயர்தரத்தில் (A/L) விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களிலும் (03) (Biology,Chemistry & Physics) சித்தி மற்றும் குறைந்தபட்சம் சாதாரண தரத்தில் (O/L) ஆங்கிலப் பாடத்தில் சித்தி அல்லது வேறு ஏதாவது ஆங்கிலக் கற்கைநெறியில் சித்தி

♦ *நிர்வாகத்துறை* **(Administration)**

MBA (Master of Business Administration)

*அடிப்படைத் தகுதி:* ஏதாவது ஒரு Bachelor Degree ஆனால் அதில் Maths or Accounts ஒரு பாடமாக இருத்தல் அவசியம்.

கலை மற்றும் விஞ்ஞான வர்த்தகத்துறை (arts, science & commerce streams, including computer courses)

**இந்தக் கட்டுரையைத் தருப்வர்கள் இந்தியாவில் உயர்கல்வி தொடர்பில் தாம் கண்ட, ஏமாற்றப்பட்ட கசப்பான அனுபவங்களை ஏனைய மாணவர்களோ, சமூகமோ அடையக் கூடாது என்பதில் உறுதியாகவுள்ளனர்.**

B.A Tamil, English, History, Music

தகுதி: ஏதாவது ஒருதுறையில் A/L Pass

குறிப்பு: இத்துறை நவீன தொழில்நுட்ப அறிவியலுடன் கூடியது.

B.C.A-Bachelor of Computer Application

B.B.A - Bachelor of Business Administration

B.B.A (CA) -B.B.A Computer Application

B.Com -Bachelor of Commerce

B.Com(CA) -B.Com (Computer Application)

B.B.M (Bachelor of Business Management)

B.Com (Coparate Seralary Ship)

B.Sc (Bachelor of Science)

i.Computer Science, ii.Maths, iii.Physics, iv. Catering & Hotel Management), v.Chemistry, vi.Maths (Computer Application), vii.Textile & Fashion design, viii.Microbiology, ix.Biochemistry, x.Bioinformatics, xi.Bio Technology, xii.Visual Communication, xiii. Costume Design & Fashion, xiv. Computer Application.

B.B.A, B.C.A, B.Sc பட்டப் படிப்புகள் பற்றிய மேலதிக தகவல்களை WWW.COLLEGES IN TAMIL NADU. Com WWW.KALVIMALAR.Com ஆகிய இணையத்தளங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**புலமைப்பரிசில்கள்**
**(SCHOLARSHIP)**

சார்க் நாடுகளுக்கு, இந்திய அரசு வருடந் தோறும் குறிப்பிட்ட அளவு புலமைப் பரிசில்களை மேற்படிப்புக்கு என வழங்குகின்றது. ஆனால் அதனது அளவு இந்தியாவில் கல்வி பயிலும் ஆயிரக் கணக்கான இலங்கை மாணவர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் சொற்பமே.

***புலமைப்பரிசில் பெறுவதற்கான படிமுறைகள்***

இது சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் இந்தியத் தூதரகத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. அடிப்படை கல்வித்தகுதி 3 Credits in A/L. ஒவ்வொரு ஆண்டும் January இல் விண்ணப்பங்கள் விநியோகிக்கப் படும். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் February 15 இனுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து குறிப்பிட்ட அளவு விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும். (Short listed) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். நேர்முகத் தேர்வில் அவரவர் பாடப் பிரிவு சம்பந்தமான கேள்விகள், ஆங்கிலத்தில் உள்ள புலமை என்பன பரிசோதிக்கப்படும்.

தகுதியானவர்களுக்கு இந்தியாவில் உள்ள கல்லூரிகள்,பல்கலைக்கழகங்கள் சம்பந்தமான கைநூல் வழங்கப்பட்டு கல்லூரி மற்றும் பல்கலைக்கழங்களுக்கான தெரிவிற்கான சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இந்தக் கையேட்டின் ஒரு பிரதியானது
Indian Cultrural Centre
133, Boudhaloka Mawatha
Colombo-4
என்னும் இடத்திலும் பார்வையிடலாம்.

இறுதியாகத் தெரிவுசெய்ப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் டில்லிக்கு அனுப்பப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். கல்லூரிகள், பல்கலைக்கழங்களின் கல்வியாண்டானது ஒவ்வொரு ஆண்டும் June -August காலப் பகுதியில் ஆரம்பிக்கப்படுகின்றது.

மேலதிக தகவல்கள் பெற்றுக்கொள்ள: -

WWW.hcicolombo.org இணையத் தளத்திலும்
Indian High Commision
Education Wing,
36, Galle Road
Colombo -3
Tel :- 0112 421605

ஆயிரக்கணக்கில் இலங்கை மாணவர்கள் இந்தியாவில் பயிலும் சந்தர்ப்பத்தில் தூதரகத்தினால் (Embassy) வழங்கப்படும். புலமைப் பரிசானது மிகவும் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே காணப்படுகின்றது. அதுவும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் ஆங்கிலப் புலமையையும் பரிசீலித்து வழங்கப்படுவதுடன் தெரிவிற்கான கால அளவும் அதிகமாகும். அத்துடன் இறுதி முடிவானது டில்லியில் உள்ள அலுவலகத்தில் எடுக்கப்படுவதால் பெரும்பாலான மாணவர்களின் விருப்பத்திற்கு அமைவான பாடப் பிரிவிற்கான சந்தர்ப்பங்களும் நிச்சயமற்றவையே!

பெரும்பாலான மாணவர்கள் இந்தியாவில் உள்ள கல்லூரிகளை நேரடியாகஅணுகுகிறார்கள். இது விருப்பத் திற்கு உரியதும், மிகவும் இலகு வானதும், கால விரயமற்ற துமான நடை முறையாகும். ஆனாலும் இதிலும் சில நடை முறைச் சிக்கல்கள் இருக் கத்தான் செய்கின்றன.

எல்லாக் கல்லூரிகளும் வெளிநாடு களில் இருந்து வரும் மாண வர்களை அனு மதிப் பதற்கான தகுதியை கொண்டிருப் பதில்லை. அவற்றுக்கான அனுமதிகளை இந்தியத் தூதரகம் (Indian Embassy) வழங்குவதில்லை.

இங்கு நடைமுறை சிக்கல் எனக் குறிப்பிடப்படுவது என்னவெனில், அனுமதி வழங்குவதற்குரிய அடிப்படை தகுதிகள் திருப்தியாக இருந்து வெளிநாடுகளில் இருந்து வரும் மாணவர்களை பயிற்றுவிப்பதற்கான ஆர்வம் காட்டாத கல்லூரிகள் (Colleges) இருக்கையில் சில கல்லூரிகள் பெயர ளவிலான தகுதிகளோடு வெளிநாட்டில் உள்ள மாணவர்களை ஆர்வம் காட்டுவது தான்! குறிப்பாக, இலங்கையில் உள்ள சீரற்ற சூழ் நிலையைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து வெளியேற தவிக்கும் மாணவர்களை இவர்கள் ஒரு பெரும் வியாபார சந்தை வாய்ப் பாக நோக்கு வது தான், இதனால் எம் மாணவர்கள் மீள முடியாத துன்பத்தில் சிக்குண்டு இருக்கின்ற சில சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன.

உரிய மாணவர்களுக்கு Visa ஆனது ஒரேயடியாக கல்விக் காலம் முழுவதற்கும் வழங்கப்படுகிறது.

மேலும் மிக முக்கியமான அம்சமாக கல்லூரி தெரிவில் கொள்ள வேண்டியது, குறிப்பிட்ட கல்லூரியில் ஏற்கனவே பயின்று கொண்டிருக்கும் மாணவர்களின் தொடர்பினை பெற்று அவர்களுடன் கலந்தாலோசித்து பின்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகும்.

இது பின்னர் மாணவர்கள் தமது தேர்வு பற்றிய வருத்தத்தினை தவிர்த்துக்கொள்ள உதவும். ஒரு முறை குறிப்பிட்ட கல்லூரிக்கு Student என எடுத்துக்கொண்டால் அதில் மாற்றங்கள் கொண்டு வருவது மிகவும் சிரமமானது.

*(தொடரும்)*

# இராணுவச் சீருடையுடன் ஆயுதம் தாங்கிய சிலர் அலுவலகத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்து விசாரணை

## இலங்கைப் .பத்திரிகை ஸ்தாபனம் விசனம்

(கொழும்பு)

இராணுவ உடையுடன் ஆயுதம் தாங்கிய சிலர் தமது தலைமை அலுவலகத்துள் அத்துமீறிப் பிரவேசித்து விசாரணை நடத்தியதாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கையால் விசனமுற்றுள்ளதுடன் கடும் ஆட்சேபத்தை தெரிவிப்பதாகவும் அந்த ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இராணுவ உடையில் ஆயுதம் தரித்த சிலர் கடந்த 27ஆம்திகதிசெவ்வாக்கிழமை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் தலைமைக்காரியாலயத்துக்குள் வந்துள்ளனர். ஸ்தாபனத்தின் நிர்வாக சபை உட்பட அங்கு கடமை புரியும் தனிப்பட்ட சிலர் தொடர்பாக அவர்கள் விசாரணை செய்துள்ளனர்.

ஆயுதம் தரித்தவர்களை காரியாலய வளவுக்குள் பிரவேசிக்க ஸ்தான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனுமதிக்கவில்லை. அதன் பின்னர் இராணுவ கோப்ரல் ஒருவர் ஆயுத மற்றவராக நிர்வாகப் பிரிவை நோக்கிச் சென்றுள்ளார். அங்கு அவர் ஸ்தாபனத்தில் உள்ள நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட தனிப்பட்ட சிலரது பெயர்களையும் கேட்டுள்ளார். அவரது அடையாள அட்டையைக் காண்பிக்குமாறு கோரப்பட்ட போது 'தான் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்' என்று கூறியதோடு அடையாள அட்டை எதனையும் வழங்க மறுத்துள்ளார்.

அலுவலகத்தில் இருந்த உத்தியோகத்தர்கள் அத்தகைய விசாரணை எதனையும் மேற்கொள்ள விரும்பினால் அதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இராணுவ அதிகாரியொருவர் முறைப்படி கோரிக்கை விடுக்க வேண்டும் என்று அந்த கோப்ரலுக்கு கூறியதன் பின் அவர் இடத்தை விட்டு அகன்றுள்ளார்.

### இராணுவப் பேச்சாளர் மறுப்பு

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்காரவின் கவனத்துக்கு இந்த விடயம் உடனடியாகக் கொண்டுவரப்பட்டது. அதன் விளைவாக அத்தகைய விசாரணை எதனையும் மேற்கொள்ள படைத்தரப்பைச் சேர்ந்த எவருக்கும் அதிகாரமளிக்கப்பட வில்லையெனவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் புலனாய்வுப்பிரிவு அந்த வகையில் தகவல்களை கோரமாட்டாதெனவும் ஸ்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

### பொலிஸில் முறைப்பாடு

அத்துடன் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இது குறித்து பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் அதிகாரமளிக்கப்படாத விஜயமாகவோ அல்லது இலங்கை இராணுவத்தின் சீருடையை அணிய அங்கீகரிக்கப்படாத வேறு சிலரின் விஜயமாகவோ இது இருக்குமானால் விடயம் குறித்து இராணுவப் பொலிஸார் உடனடி விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இது இலங்கை இராணுவம் சம்பந்தமானது. கடந்த வாரம் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 'த நேசன்' பத்திரிகையின் இணை ஆசிரியர் கெய்த் நொயார் சம்பவத்தின் பின்னர் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருக்கலாம் என்று நம்புவதற்குரிய காரணம் ஸ்தாபனத்திற்கு உண்டு. ஆகவே தனது விசனத்தைத் தெரிவிக்கிறது. அத்துடன் இது தொடர்வது அச் சுறுத்தும் செயலாகும் என இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

### இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம்

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது இலங்கை இதழியல் கல்லூரி மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் கூட்டு அமைப்பாகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நான்கு பங்காளர்களைக் கொண்டு நிர்வகிக்கப்படும். இந்த ஸ்தாபனத்தில் இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஆசிரியர்களின் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம் என் பன அங்கம் வகிக்கின்றன.

இலங்கை தமிழ் ஊடக கூட்டமைப்பு, இலங்கை முஸ்லிம் ஊடக மன்றம், ஊடக ஊழியர்களின் சம்மேளனம், தென் ஆசிய சுதந்திர ஊடக சங்கத்தின் இலங் கைப் பிரிவு ஆகியவற்றின் ஆதரவும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்திற்கு உண்டு. (அ-5)

# 2007ஆம் ஆண்டு 124 கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன - முதலீட்டுச் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

2007ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபையில் அனுமதி பெற்ற 24 கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக லங்கா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் காரணமாக இலங்கையில் வெளிநாட்டு முதலீடு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 124 கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரமேதாஸவின் ஆடைத்தொழிற்சாலைத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட 24 ஆடைக் கைத்தொழிற்சாலைகளும் இவற்றில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் குறைந்த பட்சம் 500 ஊழியர்களேனும் பணியாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி சுமார் 12 ஆயிரம் ஊழியர்கள் கடந்த வருடம் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கை முதலீட்டுச் சபையின் இணையத்தளத்தின் படி 2006ஆம் ஆண்டு 1852 கைத்தொழிற்சாலைகள் அனுமதி பெற்று இயங்கி வந்ததாகவும் கடந்த வருட இறுதியில் இந்த எண்ணிக்கை 1788 ஆக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டில் 187 ஆடைக் கைத்தொழிற்சாலைகள் இயங்கி வந்ததாகவும் 2007இல் இது 163 ஆக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


2006ஆம் ஆண்டில் 3091 மில்லியன் ரூபா வெளிநாட்டு நேரடி முதலீடாகக் கிடைக்கப்பெற்றதாகவும் 2007ஆம் ஆண்டு இந்தத் தொகை 2659 மில்லியனாகக் குறைவடைந்ததாகவும் அந்த இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# இலங்கை இராணுவம் மீது இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வைகோ கோரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்களை சிறைபிடிக்கும் இலங்கை இராணுவத்தினர் மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார். ராமநாதபுரம் சிறுகுளம் கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே வைகோ இவ்வாறு கேட்டுக்கொண்டார். மேலும் அவர் பேசுகையில்,



தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே 19 மீனவர்கள் கடத்தப்பட்டனர். இந்நிலையில் மேலும் 23 பேர் இலங்கைக் கடற்படையினரால் கடத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து இலங்கை இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்க இந்தியப் பிரதமர் வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு அ.தி.மு.க சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக மீவர்களைப் பாதுகாக்க இந்திய அரசு தவறிவிட்டது. பல வகையில் இன்னல்களை துயரத்தைக் கொடுத்து வரும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு கங்காணிவேலை செய்கிறது.

மீனவர்களை பாதுகாக்க தவறிய மத்திய அரசு, அதற்கு உடந்தையாக இருக்கும் தமிழக அரசு ஆகியவற்றுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் மக்கள் சக்தியை ஒன்று திரட்ட உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். (ந-5)

# பஸ் பயணிக்கும் வழிகளைக் கண்டறிய புதிய தொழில் நுட்பம் அறிமுகம்

(கொழும்பு)

எந்தவொரு நேரத்திலும் பஸ் வண்டிகள் பயணிக்கும் பாதை மற்றும் அவை பயணித்துக்கொண்டிருக்கும் இடம் என்பவற்றை வாகன ஓட்டு நர்களும் பொது மக்களும் இணைய வழி உயர் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அறிந்துகொள்ளும் திட்டம் ஒன்றினை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிமுகப்படுத்தவுள்ளது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களால் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த புதிய தொழில் நுட்பம் குறித்தும் இதன் ஊடாக எவ்வாறு பயனடைவது என்பது குறித்தும் உள்ளூர் பத்திரிகைகள் ஊடக பொதுமக்களை அறிவூட்டவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் எம்.எ. ஜெப்ரி தெரிவித்துள்ளார்.

"பஸ் பயணிக்கும் வழிகளை கண்டறியும் தொழில்நுட்பம் அபிவிருத்தி அடைந்த நாடு களிலேயே பயன்பாட்டில் உள்ளன. வெளி நாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்தக் கூடிய இயலுமை எம்மிடம் இல்லை. இருப்பினும் உள்ளூர் தொழில்நுட்ப அறிவை கொண்டே இதனை வடிவமைக்கவுள்ளோம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த திட்டத்தின் மூலம் ஆரம்பத்தில் மாகாணங்களுக்கிடையிலான 3ஆயிரம் பஸ்கள் பயணிக்கும் வழிகளைக் கண்டறிய முடியும் எனவும் பின்னர் 25 ஆயிரம் பஸ்களை கண்டறிய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப வசதிகள் மேம்பட்டதும் இன்னும் சில வருடங்களின் பின்னர் தினசரி பயணங்களை மேற்கொள்வோர் அவர்களுக்கு தேவையான பஸ்களை இணையத்தளம் வழியாக கண்டறிந்து கொள்ள முடியும். இந்தத் திட்டத்தை படிப்படியாகவே நடைமுறைப் படுத்தவுள்ளோம். பொது போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துவோருக்கு நன்மை பயக்கும் வகையிலேயே இந்த திட்டம் அறி முகப்படுத்தப்படுகின்றது. பாதுகாப்பு காரணங்களுக்காக அல்ல. என்றும் ஜெப்ரி தெரிவித்துள்ளார். (ஓ-5)

# ஆயுதப் போராட்டத்துக்கு 15 ஆண்டுகள் என்னை அர்ப்பணித்தவன்-பிள்ளையான்

## முதலமைச்சர் பதவி மக்கள் தந்த ஆணை

(கொழும்பு)

நான் அரசியலுக்கென வளர்க்கப்பட்டவன் அல்ல. அதற்கு பழக்கப்பட்டவனும் அல்ல. கரடுமுரடான 15 வருட ஆயுதப் போராட்டத்தில் என்னை அர்ப்பணித்து அப்போராட்ட தலைமையின் தவறான வழி நடத்தையை உணர்ந்து காலகாலமாக அல்லல்பட்ட அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக அரசியலில் பிரவேசம் செய்வதன். முதலமைச்சர் பதவியானது நான் விரும்பிய ஒன்றல்ல.

ஆனாலும் மாகாணத்தின் சகோதரத்துவம், இன ஐக்கியம் அபிவிருத்தி போன்றவற்றிற்காக மக்கள் தந்த ஆணை என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனே சதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கூறினார். பதுளை ஊவா முகாமைத்துவ வள நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் சிறப்புரையாற்றுகையில் அவர் இவ் வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கௌரவமிக்க முதலமைச்சர்களின் இந்த சந்திப்பை எம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை புரிந்து கொள்வதற்கான சிறந்த ஒரு வாய்ப்பாகவும் களமாகவும் நான் கருதுகின்றேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் துணிச்சலான தூரநோக்கான நடவடிக்கை காரணமாக கிழக்கு மக்கள் ஜனநாயக ஆட்சி முறையை அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இருந்தும் இவ்வாய்ப்பு இதுவரை வடபகுதி மக்களுக்கு கிட்டவில்லை. விரைவில் மாகாண சபையின் பலாபலன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பு அமைய வேண்டும் என்றார். (அ-5)

பிச்சைக்காரனுக்கு நீ ஒன்றும் போடவில்லையானாலும், அவன் பையைக் கிழிக்காமல் விட்டால் போதும்.

–அயர்லாந்து

# நயினாதீவு செல்லும் பக்தர்களின் சிரமங்கள் தவிர்க்கப்பட வேண்டும்

பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் நாலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினாறு தினங்கள் இடம்பெறும் மகோற்சவத்திற்கு யாழ்.குடாநாட்டில் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் சென்று வருவது வழக்கம்.

எனினும் பயணத்தின்போது இருக்கக் கூடிய படையினரின் சோதனை நடவடிக்கைகள், இறங்கி ஏறும் உபாதைகள், அத்தனை பேரும் தமது தேசிய அடையாள 'அட்டைகளைக் கொடுத்து பதிவு செய்யும் நடைமுறை போன்றவை காரணமாக பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அதேவேளை, ஒவ்வொருவரும் தேசிய அடையாள அட்டைகளை கடற்படையிடம் ஒப்படைத்து விட்டு அவர்களால் தரப்படும் அனுமதித் துண்டுடன் ஆலயத்திற்குச் சென்று மீண்டும் அந்த அனுமதித்துண்டை உரிய இடத்தில் ஒப்படைத்துவிட்டு தத்தம் தேசிய அடையாள அட்டையை மீண்டும் பெறுவதற்குள் போதும் என்றாகி விடும்.

இதனால் ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதன் காரணமாக ஆலயத்திற்குச் செல்ல விருப்பம் இருந்தும் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே அடையாள அட்டையைப் பெறுதல்– பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அத்தனைபேரையும் பதிவு செய்தல் என்பன நடைமுறைச் சிக்கலாக இருப்பதுடன்,ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களையும் அது வெறுப்படைய வைக்கின்றது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு செல்வதற்கான மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் அனைத்தும் பாதுகாப்புத் தொடர்பானவை எனக் கடற்படையினர் காரணம் கூறினாலும் மாற்று வழிகள் ஏதேனையும் கடைப்பிடித்து நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்கள் இட்டல் இடைஞ்சல் இன்றி தமது பயணத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காக,

- ❖ பஸ்வண்டிகளில் பயணிகள் ஏறுவதற்கு முன்னதான சோதனையுடன் குறிகாட்டுவானில் இறங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தல்.
- ❖ ஆலயத்தின் சுற்றுப்புறத்துக்கு வெளியில் செல்லும் பக்தர்களிடம் மட்டும் அடையாள அட்டை பெறுதல்; பதிவு செய்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்,

போன்றவற்றின் மூலம் பயணிகள் எதிர்நோக்கும் சிக்கல்களை தவிர்க்க முடியும்.

இல்லையேல் கடந்த வருடங்களைப் போல் இவ்வருடமும் பல மணிநேரம் கால்கடுக்கக் காத்திருக்கும் துன்பம் தொடரவே செய்யும்.

# எல்லாக் கொண்டாட்டங்களையும் நிறுத்துங்கள் நாட்டை முழுமையாகப் போரில் ஈடுபடுத்துங்கள்

## ஹெல உறுமய அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

கொண்டாட்டங்களை நிறுத்தி நாட்டை முழுமையாக போருக்குள் தள்ளுமாறு ஹெல உறுமய அரசாங்கத்தினைக் கோரியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் வண.ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடத்தின் எஞ்சிய பகுதிகள் முழுவதையும் நாட்டையும் முழுமையான போருக்குள் அரசு ஈடுபடுத்த வேண்டும். எல்லா விழாக்களும் நிறுத்தப்பட வேண்டும்.

வன்னி மீதான படை நடவடிக்கையின் போது படையினருக்கான ஊக்கங்களை அதிகம் வழங்க வேண்டும்.

உள்ளூர் மற்றும் அனைத்துலக எதிரிகளையும் நாம் தோற்கடிக்க வேண்டும், அதனை மக்கள் உணர வேண்டும் என்றார்.

அக்கட்சியின் அரசியல் ஆலோசகரும், சுற்றுச்சூழல்துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித் துள்ளதாவது,படையினருக்கான ஆதரவுகளை வழங்குவது எமது கட்சியின் கடமையாகும். வன்னி மீதான படை நடைவடிக்கைக்கு ஆதரவாக நாம் எல்லோரும் ஆதரவுகளை வழங்க வேண்டும். அடுத்த வருடம் வடக்கு கைப்பற்றப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

விரைவில் நாகதீப விகாரைக்கு நாம் செல்வோம் என்றார். (அ–5)

# கிழக்கு மாகாணத்தை அரசு இந்தியாவுக்கு தாரை வார்க்கிறது

## ஜே.வி.பி பா.உ. ஆவேசம்



(கொழும்பு)

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நிலாவெளி, புல்மோட்டை, வாழைச்சேனை மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை பகுதிகள் இந்தியாவுக்குத் தாரை வார்க்கப்படுவதாக ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறியுள்ளதாவது,

கிழக்குப் பிரதேச பகுதிகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை இந்த நாட்டின் உள் அரசியலில் தலையிடுவதன் மூலமாக புவியியல் மற்றும் பொருளியல் நலன் வாய்ந்த கிழக்குப் பிரதேச பகுதிகளின் மூலம் பயனடைய இந்தியா முயற்சிக்கிறது.

நிலாவெளி,புல்மோட்டை, வாழைச்சேனை மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலை பகுதிகள் இந்தியாவுக்கு தாரை வார்க்கப்படவுள்ளன. சம்பூரில் இந்தியா சார்பில் அனல் மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. ஆனால் சம்பூர் பகுதியில் வாழ்ந்து வந்த 5ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திருகோணமலையில் அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர்.

சம்பூரை இந்தியாவுக்கு தாரை வார்ப்பதால் அப்பகுதி மக்களை மீள் குடியேற மஹிந்த அரசு அனுமதி மறுத்து வருகின்றது.

கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே இன மோதல்களை உருவாக்குவதற்கு மஹிந்த அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

கிழக்குப் பிரதேச தேர்தலே இந்தியாவின் அறிவுறுத்தலின் கீழ் நடத்தப்பட்டது தான்.

அங்கே நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடத்தப்பட வில்லை என்றார் அவர். (ந–5)

# மோதல்களில் சம்பந்தப்படாத மக்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

## ஐ.நா. சபை கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மோதல்களுடன் சம்பந்தப்படாதவர்களை இழிவாக நடத்தும் செயற்பாட்டை மோதல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினரும் உடனடியாக நிறுத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர நிவாரண உதவிகளுக்கான செயலாளர் நாயகம் ஜோன் ஹோல்ம்ஸ் வெள்ளிக்கிழமை கண்டித்துள்ளார்.

இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து இதுவரை 200 பொதுமக்கள் இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களால் உயிர்களை இழந்துள்ளனர். பொதுமக்கள் கூடுதலாகப் பயணம் செய்யும் பொது போக்குவரத்து சாதனங்கள் மற்றும் மக்கள் பெருமளவில் கூடும் இடங்களிலிலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோதல்களுடன் தொடர்புபடாதவர்களை இலக்குவைப்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு முரணானது. இதற்கு உரிய தரப்பினர் பதில் கூறக் கடமைப்பட்டுள்ளனர். இரண்டு தரப்பினரதும் இழிவான நடைமுறை நிறுத்தப்பட வேண்டும் என ஜோன் ஹோல்ம்ஸ் கோரிக்கை விடுத்தார்.

ஒரு வாரத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களில் 20ற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டதுடன் ஒரு டசினுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர். கடந்த புதன்கிழமை யாழ் குடாநாட்டுப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 13 பேர் காயமடைந்தமையும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு, தெஹிவளைப் பகுதியில் புகையிரதத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 9பேர் கொல்லப்பட்டதுடன் 73 பேர் காயமடைந்தனர். மூன்று தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் வீதியோரத்தில் மறைந்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர் என ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ–5)

## நேசன் ஆசிரியர் கீய்த் நோயர் தாக்குதல் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

(கொழும்பு)

'த நேசன்' ஆங்கிலச் செய்தித்தாளின் உப ஆசிரியர் கீய்த் நோயர் தாக்கப்பட்டமை குறித்து இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்த நிலையில் அவரின் தொலைந்து போயுள்ளதாகக் கூறப்பட்ட கையடக்கத் தொலைபேசி தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை தாக்கப்பட்ட கீய்த் நோயர் தம்மைக் கடத்திச் சென்று தாக்கியவர்கள் தொடர்பாக எவ்வித தகவல்களையும் கூற மறுப்பதாகப் பொலிஸர் தெரி வித்துள்ளனர்.

கடத்திச் சென்று அவரைத் தாக்கியவர்கள் விடுத்த அச்சுறுத்தல் காரணமாகவே அவர் தகவல்களை வெளியிட மறுப்பதாக நம்பப்படுகிறது. (அ–5)

ஓலைச் சுவடிகள் 36

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### கோப்பி குடிப்பதனால் ஞாபக சக்தி கூடுமா?

கோப்பி ஞாபக சக்தியைக் கூட்டும் என்று கூறினால் இன்றை தலைமுறையும் நம்பத் தயாரக உள்ளனர். ஆவி பறக்கும் கோப்பி ஒரு கையிலும் சூடான செய்திகளைப் பகிர்ந்தளிக்கும் செய்தித்தாள் ஒரு கையிலுமாக காலை வேளையை ஆரம்பிப்பது பல காலங்களாக நம் நாட்டு வழக்கமாகி விட்டது. சிலரிடம் கோப்பிக்குப் பதில் தேனீர் கோப்பை இருக்கலாம் என்பதைத் தவிர, எப்படியானாலும் நாள் முழுதும் நீடிக்கக் கூடிய ஊக்கம் வழங்க இந்த காலைப்பானத்துக்கு சக்தியுண்டு என்பதே பரவிய நம்பிக்கை. வயோதிபத்தாலும் ,வேறு பலவீனங்களாலும் நினைவுத்திறன் வெறும் நினைவாக மாறிவிடலாம். இதற்கும் கோப்பியே நிவாரணம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

நினைவுத்திறனை அதிகரிக்கும் சக்தியும் கோப்பிக்கு உண்டு என்பதே இப்போதைய கண்டுபிடிப்பு. விசேஷமாக முதியோரில் அரிசோனா பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியில் கோப்பியில் ஆடங்கியுள்ள கஃபீன் என்ற வேதிப்பொருள் அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களின் ஞாபக சக்தியை விருத்தியடையச் செய்யும் என்று கண்டறியப்பட்டுள்ளது. முதியோரில் இடைவிட்டு ஞாபக சக்தி கூடிக் குறைந்திருக்கும். அதிகாலையில் உயர் நிலையிலும் நடுப்பகலுக்கு மேல் தாழ்ந்தும் இருப்பதுண்டு! "கஃபீன்," ஞாபகசக்தியிலுண்டாகும் இந்த வேறுபாட்டை தடைசெய்யும் "அல்ஷிமெர்ஸ்" என்ற நோயைக் கூட கோப்பி அருந்துவதால் தடுத்து நிறுத்த இயலும்.



யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட 26 ஆம் அணி குழு IV இன் தயாரிப்பான 'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்' இறுவெட்டு வெளியீட்டு விழாவில் யாழ்.அரச அதிபர் மங்கல விளக்கேற்றுவதையும் இறுவெட்டை யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் சிவன்சுதன் வெளியிட்டு வைக்க, இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அருமைநாயகம் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

## மோதல்...

படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

வடக்கு ஜனகபுரவில் பகல் 12.10 மணிக்கு நடந்த மோதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். மன்னார் பெரியமடு குளப் பகுதியில் நிகழ்ந்த மோதலில் படையினர் 4 பேர் காயமடைந்தனர்.

முற்பகல் 9.30 மணிக்கு ஒருவரும் பிற்பகல் 3.30 மணிக்கு நடந்த மோதல்களில் மூவரும் காயமடைந்தனர். வவுனியா நவ்வி மேற்கில் பிற்பகல் 3.30 மணிக்கு நிகழ்ந்த மோதலில் படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (எ-5)

# அதிகளவு எரிபொருள் பாவனையை அரசாங்கமே மேற்கொள்கிறது -திவயின

(கொழும்பு)

நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் எரிபொருளின் பெரும் பகுதியை அரசாங்கமே பயன்படுத்துவதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டில் பாவனையிலுள்ள 11 இலட்ச நான்கு சக்கர வாகனங்களில் 2.5 இலட்சம் வாகனங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிதியமைச்சின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தேசிய சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி டி.எஸ்.ஜயவீரவினால் இந்தப் புள்ளி விபரத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

வாகன நெரிசல் காரணமாக இழக்கப்படும் எரிபொருள் மற்றும் மனித உழைப்பின் பெறுமதி வருடாந்தம் 300 ஆயிரம் மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. (ச-5)

## சிறிலங்கா...

நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்ததையடுத்தே ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் அங்கு இடம்பெற்ற வன்முறைகளுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் தொடர்பிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்துத் தெளிவுபடுத்தவே ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை பசில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபையில் இரு தரப்பும் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆராயப்பட்டதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## வன்னித் தாக்குதலின்...

இடம்பெற்ற குண்டுவெடிப்பு பதற்றத்தைத் தோற்றுவித்துள்ள அதேவேளை வில்பத்து சரணாலயப் பகுதியில் இராஜாங்கன பகுதியிலுள்ள யால-18 பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஊர்காவற் படையினருக்குமிடையில் நடைபெற்ற மோதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் நடைபெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே பாணந்துறைப் புகையிரதம் மீதான குண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

வன்னியில் நடைபெற்ற தாக்குதலை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே நடத்தியதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இந் நிலையில் சிறுத்தீவில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அதிர்ச்சிகரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சிறுத்தீவு, யாழ்ப்பாணத்திற்கும் மண்டைதீவுக்குமிடையிலான நீரேரியில் அமைந்துள்ளது. அதிகாலை பூநக்ரியின் கல்முனைப் பகுதியிலிருந்து 8 படகுகளில் வந்த விடுதலைப்புலிகளே தாக்குதலை நடத்தினர்.

கல்முனைப் பகுதியானது சிறுத்தீவிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ளது. தாக்குதல் நடை பெற்றபோது சிறுத்தீவிலுள்ள படை முகாமில் 15 கடற்படையினரும் 6 இராணுவத்தினரும் பணியிலிருந்தனர்.

இத் தாக்குதலில் இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதரகவும் இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவரும் 2 கடற்படையினரும் காணாமல் போனதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் படைத் தரப்புத் தெரிவித்திருந்தது.

எனினும் இத்தாக்குதலில் 13 கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் மூவரின் சடலங்களும் பெருமளவிலான ஆயுதங்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சமரின் போது இரு தரப்பும் செறிவான பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர். படையினரின் கவனத்தை திசை திருப்பும் முகமாகவே புலிகள் பீரங்கித் தாக்குதலை நடத்தியிருந்தனர்.

பூநகரியின் கல்முனைப் புள்ளியானது விடுதலைப்புலிகளின் பிரதான பீரங்கித்தளமாகும். இங்கிருந்து ஏவப்படும் 130 மி.மீ. பீரங்கி எறிகணைகள் பலாலி கூட்டுப் படைத் தளத்தைத் தாக்கும் திறன் கொண்டவை.

எனினும் அதன் ஒடுக்கமான தரையமைப்பு சில பிரதிகூலங்களையும் கொண்டுள்ளது. மேலும் கல்முனைப் புள்ளியானது கடற்புலிகளின் தாக்குதல் பின் தளமாகும். இது யாழ்.நகரிலிருந்து 6கி.மீ. அகலமான கடல்நீரேரியின் மறுபக்கத்தில் அமைந்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தாக்குதலின்போதும் விடுதலைப்புலிகள் மண்டைதீவில் தரையிறக்கத்தை மேற்கொண்டிருந்தனர். வியாழக்கிழமை நடைபெற்ற தாக்குதல் தமிழ் மக்களுக்கு உள்ளூரிலும் வெளிநாட்டிலும் பெரும் உளவியல் உறுதிகளை ஏற்படுத்தியிருக்கும்.

எனினும் இத் தாக்குதலை நோக்கும் போது விடுதலைப்புலிகள் மண்டைதீவில் பெரும் தரையிறக்கத்தை மேற்கொள்ளலாம் என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. அது சாத்தியமானால் யாழ்.குடாநாட்டின் நிலைமை மேலும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்பதையும் நிராகரிக்க முடியாது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## 19 ஆயிரம்...

பணிகளில் கடற்படையினரின் படகுகளும் விமானப் படையின் இரண்டு உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான சமைத்த உணவுகளையும் உலர் உணவுகளையும் உடனடியாக வழங்குமாறு அந்தந்த மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் இறந்தவர்களுக்கு மரணச் செலவுகளுக்காக முதற் தவணையாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (ச)

## புத்தளத்தில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுனைடெட் தேவாலயத்தின் மதகுரு கந்தையா சிவகுமார் மற்றும் அவரின் உதவியாளரான மாரியப்பன் யுவனேஸ்வரன் உட்பட இரண்டு தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனைத் தவிர மற்றும் ஒரு சம்பவத்தில் இரண்டு தமிழர்கள் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். (ச-5)

## வடக்கினை...

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். கிழக்கு மாகாணத்தினை மீட்ட எமது படையினர் வடக்கையும் மீட்கும் திட்டத்தினை வேகப்படுத்தியுள்ளனர்.

வடக்கினை மீட்கும் நடவடிக்கையினைத் தடுத்து நிறுத்தத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புத்திசாதுரியத்துடன் மக்கள் நடந்து கொள்வதன் மூலமே இத்தகைய சதித் திட்டங்களை முறியடிக்க முடியும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தை முதன்மைப்படுத்தி நாட்டில் குழப்பகரமான சூழலை உருவாக்கி விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயல்கின்றன.

உலக சந்தையில் எரிபொருள் விலை மேலும் பல டொலர்களாக அதிகரித்தாலும் வடக்கினை மீட்பதற்கான நடவடிக்கை கைவிடப்படமாட்டாது என்றும் அவர் கூறினார். (ச-5)

## ஆயுதக்...

வினருடன் தொடர்புகளைக் கொண்டிருந்தன் மூலம் அரசாங்கம் சர்வதேச நீதி நடைமுறையை முழுமையாக மீறியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் 'ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் ஏற்பட்டதாக அல்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## வர்த்தகர்...

பதற்றம் ஏற்பட்டுள்ளது.முஸ்லிம் வர்த்தகர் வெட்டிக் கொல்லப்பட்டதையடுத்து தமிழர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களை அடுத்து காத்தான்குடி நகரப் பகுதியில் நேற்று மாலை கடைகள் இழுத்து மூடப்பட்டதுடன் நகரம் வெறிச்சோடியது.பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். (ச-5)

## அரசின்...

கொண்டு இக் கூட்டணியில் இணைய மக்கள் விடுதலை முன்னணியும் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் அதன் காரணமாக அரசாங்கத்தைத் தோற்கடிக்க இந்தப் பாரிய கூட்டணியுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டணியை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மிக விரைவில் தோற்றுவிப்பார் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. இந்தப் பாரிய கூட்டணியின் பொதுச் செயலாளராக முன்னாள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் தலைவர் டிரான் அலஸ் இருப்பார் எனவும் இதை அமைப்பதில் எஸ். பி.திஸாநாயக்க முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பாரிய கூட்டணி இளைஞர், மகளிர், துறைசார்ந்தோர், பிக்கு முன்னணிகள், ஆசிரியர்கள், விவசாயிகள் என பல்வேறு துறைகளில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் எனவும் இதனூடாக அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவதற்கான மக்கள் ஆதரவைப் பெறும் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

அன்பு வாசகர்களே!



நயினாதீவு நாகபூஷணி அம்மன் மகோற்சவத்தை ஒட்டி வலம்புரி வருடந்தோறும் வெளியிடும் நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை பகுதிக்கு கவிதை எழுதுபவர்கள் ஆகக் கூடியது எட்டு (8) வரிகளுக்கு மேற்படாமல் கவிதையை எழுதுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பயிற்சிப் பரீட்சை வெற்றி இலக்கு
வினாத்தாள்கள் தரம் 1,2,3,4,5 வெளிவந்து விட்டன.
அதிபர்கள்,தனியார் கல்வி நிறுவனத்தினர், மாணவர்கள், பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளலாம்.
தயா அச்சகம்
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் சந்தி
(C-1180)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.